**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | தங்கேஸ்வரி | Prosecution | P.W –6 LW–7 Chief and Cross |
| Husband Name | நடராஜன் | Court | JM, Court, Sirkali. |
| Village | தில்லையம்மன் நகர் | Taluk | சிதம்பரம் |
| Age | 55/2025 | Calling | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.04.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். என் மூத்தமகன் பெயர் செல்வம் பஜாஜ் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். இளையமகன் பெயர் ராஜா MA படித்துவிட்டு பெங்களூரில் வேலை பார்த்து வருகிறார். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு எதிரி நிஷா என்ற பெயரில் சிதம்பரம் RMMCH மருத்துவ மனையில் டாக்டராக வேலை பார்ப்பதாக கூறினார். பிறகு என் மகன் எதிரியை காதலிப்பதாக கூறி அவரை திருமணம் செய்து கொள்ள விரும்பினான். நான் என் மகனிடம் எதிரியை நேரடியாக அழைத்து வர சொன்னேன். என் மகன் வீட்டிற்கு அழைத்து வந்தார். எனக்கு அப்பா அம்மா என்றும் யாரும் இல்லை நான் தேவர் பொன்னு என் சொன்னார். நான் ஊர் என்ன ஊர் என்று கேட்டேன் அப்போது நான் மதுரையை சார்ந்த பொன்னு என்று சொன்னார். உங்களுக்கு தான் பெண் பிள்ளை இல்லையே என்னை பெண் பிள்ளையாக நினைத்து பார்த்து கொள்ளுங்கள் என்று சொன்னார். அப்போது என் மகனும் சிதம்பரம் RMMCH மருத்துவமனையில் டாக்டர் ஆக உள்ளார் நான் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் நகரில் குடியிருந்து வரும் நபர்களிடம் நான் சொல்லி அந்த பெண்ணிற்கு நலுங்கு வைத்து 2023 ஆண்டு திருமணம் செய்து வைத்தோம். அதன் பின்னிட்டு 11 காலம்

தனிகுடித்தனம் போய்விட்டார்கள். பிறகு கொஞ்ச நாள் கழித்து என் மகன் எனக்கு போன் செய்து இந்த வழக்கு எதிரி சீர்காழியை சேர்ந்த நபரை திருமணம் செய்து கொண்டதாக முகநூலில் புகைப்படம் பார்த்ததாக என் மகன் எனக்கு தகவல் சொன்னார். பின்னிட்டு போலீசார் எங்களை ஏமாற்றி எதிரி என் மகனை திருமணம் செய்த விவரம் பற்றி போலீசார் எங்களிடம் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கோரியதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | செல்வம் | Prosecution | P.W –5 LW–6 Chief and Cross |
| Father Name | நடராஜன் | Court | JM, Court, Sirkali. |
| Village | தில்லையம்மன் நகர் | Taluk | சீர்காழி |
| Age | 29/2025 | Calling | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.04.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து பஜாஜ் இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என்னுடைய தம்பி ராஜா இந்த வழக்கு எதிரியால் பாதிக்கப்பட்டுள்ளார். கடந்த 2023 ம்வருடம் இந்த வழக்கு எதிரி என் தம்பி ராஜாவை காதலிப்பதாக கூறினார். எதிரி சிதம்பரம் RMMCH மருத்துவ மனையில் டாக்டராக பணிபுரிவதாக கூறினார். நானும் RMMCHயில் டாக்டர் கோட்டு மற்றும் ஸ்டெதெஸ்கோப்புடன் எதிரியை பார்த்துள்ளேன். எதிரி என் தம்பி ராஜாவை திருமணம் செய்து கொள்வதாக என் அம்மாவிடம் கூறினார். என் அம்மா எதிரியிடம் விசாரித்த போது எதிரிக்கு தாய் தந்தை இல்லை என்றும் தனியாக விடுதியில் தங்கி வேலை பார்ப்பதாக கூறினார். அதன் பிறகு வீட்டிலேயே திருமணம் செய்து வைத்தோம். பிறகு அவர்கள் தனியாக வாழ்வதாக கூறினர். அதன் பிறகு அவர்கள் இருவரும் தனிக்குடித்தனம் 1 ஆண்டுகாலம் செய்து வந்தார்கள். எங்களுடன் பேச்சு வார்த்தை இல்லை. அதன் பின்னிட்டு 26.01.2025 ந் தேதி போலிசார் எங்களை விசாரித்தார்கள். எதிரி சீர்காழியை சேர்ந்த சிவா என்ற நபருடன் 20.01.2025 ந் தேதி திருமணம் செய்ததாக கூறினார்கள். அதன் பிறகு தான் எங்களுக்கு எதிரி 2 திருமணம் செய்த விபரம் தெரியவந்தது. அதன் பிறகு என் தம்பியிடம் பேசினோம். போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கோரியதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அஞ்சம்மாள் | Prosecution | P.W –4 LW–4 Chief and Cross |
| Husband Name | தங்கராசு | Court | JM Court, Sirkali. |
| Village | வாய்க்காங்கரை தெரு, புத்துார். | Taluk | சீர்காழி |
| Age | 50/2025 | Calling | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.04.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த சில வருடங்களுக்கு முன்பு என் மகன் பெயின்டராக வெளியூருக்கு வேலை சென்ற போது இந்த வழக்கு எதிரி என்மகனை காதலிப்பதாக கூறி அறிமுகம் ஆனதாகவும், எதிரி சிதம்பரம் Opயில் நர்ஸ் வேலை செய்வதாகவும் தாய் தகப்பனார் யாரும் இல்லை விடுதியில் தங்கி வேலை செய்வதாக என் மகன் என்னிடம் கூறினார். நான் திருமணத்தற்கு சம்மதிக்கவில்லை அதனால் என் வீட்டிற்கு எதிரி என் மகனுடன் வந்து திருமணம் செய்து வைக்குமாறு கூறினார். திருமணம் செய்து வைக்காவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டியதால் வீட்டில் வைத்தே திருமணம் செய்து வைத்தோம் . திருமணத்திற்க பின்னிட்டு வீட்டில் இருந்த நகைகள் அடிக்கடி காணாமல் போனதால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு என் மகன் எதிரியுடன் சிதம்பத்தில் வீடு வாடகைக்கு எடுத்து வாழ்ந்து வந்தார்கள் . 3 ஆண்டுகள் பின்னிட்டு என் மகன் எதிரியை காணவில்லை என்று போனில் தகவல் சொன்னார். நான் தேடி பார்க்க சொன்னேன். தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. அதன் பின்னிட்டு இந்த ஆண்டு ஜனவரி மாதம் சீர்காழீயை சேர்ந்த ஒரு நபரை எதிரி திருமணம் செய்த புகைப்படத்தை என் மகன் என்னிடம் காட்டினார். அப்போது தான் எங்களை ஏமாற்றியது போல் மற்றொருவரை ஏமாற்றிய

விபரம் தெரிந்து திருமணம் செய்த நபரின்செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு என் மகன் நடந்த விபரத்தை சொன்னார். எதிரி தற்போது திருமணம் செய்த நபர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலிசார் எங்களை விசாரித்தார்கள் நான் எங்களை ஏமாற்றிய விபரத்தை சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கோரியதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | நெப்போலியன் | Prosecution | P.W –3 LW–3 Chief and Cross |
| Father Name | தங்கராசு | Court | JM Court, Sirkali. |
| Village | வாய்க்காங்கரை தெரு, புத்தூர். | Taluk | சீர்காழி |
| Age | 34/2025 | Calling | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.04.2025.**

<u>சத்தியபிரமாணம் பெறப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து பெயின்டராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு எதிரி மீரா என்று எனக்கு அறிமுகம் ஆனார் . விசாரித்த போது லெட்சுமி என்று தற்போது தெரியவந்தது. கடந்த 2017 ம் வருடம் சிதம்பரத்திற்கு வேலைக்காக பேருந்தில் செல்லும்போது இந்த வழக்கின் எதிரி எனக்கு அறிமுகம் ஆனார். அவர் B.sc., நர்சிங் படித்துள்ளதாகவும் தான் சிதம்பரம் RMMCH மருத்துவ மனையில் வேலை பார்ப்பதாகவும் என்னிடம் சொன்னார். அதன் பின்னிட்டு எங்கள் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. எதிரிக்கு அப்பா , அம்மா கிடையாது என்று கூறினார். அதன் பின்னிட்டு திருமணம் செய்து கொள்ளலாம் என்றும் என்னை பிடித்துள்ளது என்றும் என்னிடம் கூறினார். நான் வீட்டில் பெற்றோரிடம் கேட்டு சொல்வதாக கூறினேன். என் அம்மாவிடம் எதிரி பேசுவதாகவும் தன்னையும் வீட்டிற்கு அழைத்து செல்லுமாறு கூறினார். பின்பு என் வீட்டிற்கு அழைத்து வந்தேன் . என் அம்மாவிடம் எனக்கு அம்மா அப்பா கிடையாது என்றும் உங்கள் மகனை திருமணம் செய்து கொள்ள விருப்பம் உள்ளதாகவும் பேசி திருமணத்திற்கு சம்மதம் வாங்கினார். உடனே என் அம்மா எதிரியிடம் உன் உறவினர்களிடம் பேசி திருமணம் முடிக்கலாம் என்று கூறினார். ஆனால் எதிரி நான் தேவர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும் அவர்களுக்கு தெரிந்தார் பிரச்சனை வரும் என்றும் கூறினார். அதன் பிறகு

தாய் தந்தை இல்லாத பெண் என்பதாலும் எனக்கும் பிடித்துள்ளதாலும் என் அம்மா திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார். எங்கள் வீட்டில் உள்ள நகை பணம் கொண்டும், எங்கள் உறவினர்கள் முன்னிலையிலும் 25.11.2017 ந் தேதி புத்தூர் எங்கள் வீட்டில் வைத்து திருமணம் செய்துகொண்டேன். திருமணம் ஆன உடன் புத்தூரில் வீடு வாடகை எடுத்து தங்கி வாழ்ந்து வந்தோம்.பின்னர் சிதம்பரத்திலலும் வாடகைக்கு வீடு எடுத்து வாழ்ந்து வந்தோம். அதன் பிறகு 3 வருடம் கழித்து 2021 ம் வருடம் நான் வேலைக்கு சென்று வீடு திரும்பிய போது எதிரி வீட்டில் இல்லை. நான் அவர் போனுக்கு தொடர்பு கொண்ட போது தொடர்பு கொள்ள முடியவில்லை. ஸ்விச் ஆப் என்று வந்தது. அதன் பின்னிட்டு 1 வருடம் கழித்து எனக்கு ஒரு போன் வந்தது அதில் எதிரி ஈரோட்டை சேர்ந்த ஒருவருடன் தனக்கு திருமணம் நடைபெற்றதாகவும் இனி என்னை தொடர்பு கொள்ளாதீர்கள் என்று கூறினார். எங்கள் வீட்டில் இருந்து செல்லும் போது நான் 5 பவுன் நகை போட்டு இருந்தேன். அதன் பிறகு 20.01.2025ந் தேதி எதிரி ஒரு பையனுடன் திருமணம் நடைபெற்றதாக Face bookயில் நான் பார்த்தேன், அதன் பின்னிட்டு நான் திருமணம் ஆன நபரின் தொலை பேசி எண்ணை என் நண்பர்களிடம் கேட்டு பெற்றேன். அந்த நபர் பெயர் சிவச்சந்திரன் திட்டை குளக்கரை தெருவினை சேர்ந்தவர் என்பது தெரியவந்தது. அந்த நபரிடம் எதிரி தன் பெயரை நிஷாந்தினி என்றும் தான் டாக்டர் என்றும் கூறி திருமணம் செய்ததாக கூறினார். சிவச்சத்திரனிடம் நான் நேரடியாக பேசினேன். நான் முதலில் AWPS ல் சீர்காழியில் புகார் கொடுத்தேன். அதன் பிறகு அவர் சீர்காழி AWPS ல் புகார் தெரிவித்தனர். 25.01.2025 ந் தேதி புகார் அளித்திருந்தனர். 26.01.2025 ம் தேதி விசாரணை எங்களை போலிசார் விசாரித்தார்கள். விசாரணையின் பின்னிட்டு தான் எதிரி பழையாரை சேந்தவர் என்றும் அவருக்கு திருமணம் ஆகி இரு குழந்தைகள் உள்ளனர் என்றும் தெரியவந்தது. சிவச்சந்திரனை திருமணம் செய்வதற்கு 1 வருடம் முன்பு சிதம்பரத்தை சேர்ந்த ராஜா என்பவரை திருமணம் செய்ததாக தெரிந்து கொண்டேன். மேற்படி விபரத்தை விசாரணையில் தெரிந்த போது தான் மீரா என்ற பெயரில் என்னை ஏமாற்றிய விபரம் தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கோரியதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | வாசுகி | Prosecution | P.W –2 LW–2 Chief and Cross |
| Husband Name | ஜீவா | Court | JM, Court, Sirkali. |
| Village | திட்டை ரோடு, சீர்காழி | Taluk | சீர்காழி |
| Age | 50/2025 | Calling | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.04.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 1 ஆண்டுக்கு முன்பு நான் சிதம்பரம் RMMCH மருத்துவ மனையில் சிகிச்சையில் இருந்தேன். அப்போது மருத்துவ மனையில் அங்கு வந்த எதிரி நான் மருத்துவர் என்றும் என் மகனிடம் தொலைபேசி மூலம் அடிக்கடி பேசி காதலிப்பதாக கூறி எனக்கு அப்பா அம்மா கிடையாது என்றும் தேவர் சமூகத்தை சேர்ந்தவர் என் மகனை உடனடியாக திருமணம்செய்ய வேண்டும் என்றும் கூறினார். நாங்கள் 20.01.2025 ம் தேதி திருமணம் செய்து வைத்தோம். அதன் பின்னிட்டு நெப்போலியன் என்பவரை ஏற்கனவே திருமணம் செய்துள்ளார் என்ற விபரத்தை என் மகன் என்னிடம் கூறி அழுதான். நாங்கள் எதிரியை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கோரியதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சிவச்சந்திரன் | Prosecution | P.W –1 LW–1 Chief and Cross |
| Father Name | ஜீவா | Court | JM Court, Sirkali. |
| Village | திட்டை ரோடு, சீர்காழி | Taluk | சீர்காழி |
| Age | 30/2025 | Calling | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.04.2025.**

<u>சத்தியபிரமாணம் பெறப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து (RBL) தனியார் வங்கியில் மேனேசராக பணிபுரிகிறேன். கடந்த 1 ஆண்டுக்கு முன்பு என் தாயாருக்கு உடல் நிலை சரியில்லாதால் நான் சிதம்பரம் RMMCH ல் சிகிச்சைகாக சேர்த்த போது என் அம்மாவிற்கு மருந்து வாங்க வெளியே வந்தேன் அப்போது இந்த வழக்கு எதிரி மருத்துவர் கோட்டை அணிந்து வந்து என்னிடம் என் அம்மா பற்றி விசாரித்து அவரை மருத்துவர் என்று அறிமுகம் செய்து உதவி தேவை என்றால் அவரின் செல் நம்பர் கொடுத்து என்னை தொடர்பு கொள்ள சொன்னார். அதன பின்னிட்டு அவரே எனக்கு போன் செய்தார். அதன் பிறகு என்னுடன் தொடர்ந்து பேசி என்னை காதலிப்பதாகவும் அவர் மதுரை தேவர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும் தாய் தகப்பனார் கிடையாது என்றும் உடனடியாக திருமணம் செய்து கொள்ள வேண்டும் இல்லை என்றால் என் உறவினர்கள் சம்மதிக்க மாட்டார்கள் என்று சொன்னார். நான் என் அம்மா விடம் எதிரியை அழைத்து சென்றேன். என் அம்மா தற்போது திருமணம் வேண்டாம் என்றுசொன்னார். எதிரி சம்மதிக்காமல் விமர்சியாக திருமணம் நடத்த வேண்டும் என்று கூறியதால் நாங்கள் திருமணம் பத்திரிக்கை அடித்து 20.01.2025 ம் தேதி ராஜேஸ்வரி திருமண மண்டபம் தென்பாதி சீர்காழியில் விமர்சியாக திருமணம் நடத்தினோம் திருமணம் நடந்த 2 நாட்களுக்குள் சர்ஜரி இருப்பதாகவும் உடனடியாக சிதம்பரம் செல்ல வேண்டும் என்று சொன்னார் நான் திருமணம் முடிந்த உடனேயே வேலை க்கு செல்ல வேண்டாம் என்று கூறினேன். அதனால் என்னுடன் தொடர்ந்து சண்டை போட்டுக்கொண்டு இருந்தார். 5 நாட்களுக்கு பின்னிட்டு

புத்தூரில் இருந்து நெப்போலியன் என்பவர் Face book யில் பார்த்துவிட்டு எனக்கு செல்போன் மூலம் தொடர்பு கொண்டு எதிரிக்கும் அவராருக்கும் 5 ஆண்டுகளுக்க முன்பு திருமணம் நடந்ததாகவும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்வதாகவும், எதிரி உண்மையை மறைத்து என்னை திருமணம்செய்த விபரத்தை என்னிடம் கூறினார். நான் எதிரியிடம் விசாரித்த போது நெப்போலியனை திருமணம்செய்து 5 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்த விபரத்தையும் அதன் பின்னிட்டு பிரிந்து சிதம்பரத்தில் ராஜா என்பவரை திருமணம்செய்து 1 ஆண்டுகாலம் வாழ்ந்த விபரத்தையும் அவருக்கு பழையார் சொந்த ஊர் என்றும் அங்கு சிலம்பரசன் என்பவரை திருமணம் செய்து 2 குழந்தைகள் உள்ளதாகவும் சிலம்பரசன் உயிருடன் இல்லை என்றும் உண்மையை ஒப்புக்கொண்டார் அதன் பின்னிட்டு என்னை ஏமாற்றி எனக்கு அதிக செலவை ஏற்படுத்தி மன உலைச்சலுக்கு ஆளாக்கிய எதிரிக்கு எதிரிகாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கோரியதன் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.**